
# தேவன் மோசமானவற்றில் இருந்து நன்மையைக் கொண்டு வருகிறார்

**ஜெபம் :** “அன்பான கர்த்தாவே! உம்மை நம்புகிறவர்களுக்கு எல்லாவற்றையும் நன்மையாகவே நீர் செய்து முடிக்கிறீர் என்பதைக் காட்ட இந்த பாடத்தை நீர் உபயோகப் படுத்துவீராக.”

இந்த சிறுவர்க்கான கல்வி - செயல்பாடுகளில் ஏதாவது அல்லது எல்லாவற்றையும் தெரிந்து கொள்க



வசதி இருக்குமானால் குழந்தைகள் இந்த சித்திரத்துக்கு **வண்ணம்** தீட்டவும்

அப். 27:13-28:10 ல் உள்ள கதையை ஒரு பெரிய பிள்ளையோ அல்லது பெரியவர்களில் ஒருவரோ சொல்லட்டும் அல்லது வாசிக்கட்டும். மோசமான விஷயங்கள் நடக்கும் போதும், தேவன் எவ்வாறு தமது மக்களை உபயோகித்து நற்செய்திகளையும், ஆசீர்வாதத்தையும் உலகத்துக்குக் கொண்டு வருகிறார் என்பதை இந்தக் கதை காட்டுகிறது.

சிறுவர்களிடம்இந்தக் **கேள்விகளைக் கேட்கவும்.**

- கப்பலில் இருந்த மக்கள் புயலினால் சாகமாட்டார்கள் என்பதைப் பவுல் எவ்வாறு அறிந்தார் *(பதில் அப். 27:23-25).*
- பவுலுக்கான தேவனின் திட்டம் என்ன? *(27:24)*
- மெலித்தா தீவின் மக்கள் பவுல் ஒரு கடவுள் என்று ஏன் எண்ணினர்? *(28:5-6).*
- தங்கள் தீவிற்கு குணமாகுதலைக் கொண்டு வந்த பவுலிற்கு மெலித்தா மக்கள் எவ்வாறு நன்றி செலுத்தினர் *(28:10).*
- பவுலுக்கு நேர்ந்த துன்பத்தை மற்றவர்களுக்கு நன்மையைக் கொண்டுவர எவ்வாறு தேவன் உபயோகித்தார்.

**பவுலின் கப்பல் உடைந்த கதையின் பகுதியை நாடகமாக்குக**

சபையின் முக்கிய ஆராதனைத் தலைவரோடு பேசி இந்த சிறு நாடகத்தை பெரியவர்களின் உதவியோடு சிறுவர்கள் நாடகமாக வழங்க ஏற்பாடு செய்க. இதை நடிக்க உங்களிடம் போதுமான சிறுவர்கள் இல்லாவிட்டால், அயலகத்தாரின் குழந்தைகளை உதவிக்கு அழைக்கலாம். இது கிறிஸ்துவை அறிந்து கொள்ள அவர்களுக்கு உதவும் ஒரு நல்ல வழியாகும். உரையாடலின் ஒவ்வொரு வார்த்தையையும் பிள்ளைகள் மனப்பாடம் செய்ய வேண்டிய அவசியமில்லை; என்ன சொல்ல வேண்டும் என்பதின் பொதுவான மையக் கருத்தை ஒவ்வொரு குழந்தையும் அறிந்திருக்கிறார்களா என்பதை மட்டும் நிச்சயப்படுத்திக் கொள்ளவும்.

பெரிய பிள்ளைகள் அல்லது பெரியவர்கள் இந்தப் பாத்திரங்களில் நடிக்கலாம்:

ï **கதை கூறுபவர்:** கதை சுருக்கம் கூறி சிறுவர்கள் சொல்ல வேண்டியதை ஞாபகப்படுத்துகிறவர்

- **பவுல்**
- **புபிலியு** (பவுலைத் தன் வீட்டுக்கு அழைத்தவன்)

சிறிய பிள்ளைகள் ஏற்க வேண்டிய பாத்திரங்கள்

- **கப்பல் தலைவன்**
- **கப்பலில் இருந்த மாலுமிகள்**
- **தீயை சுற்றி இருந்த மலித்தாத் தீவு மக்கள**

## நாடகம், முதல் பகுதி : புயல் (அப். 27:13-30).

**கதை கூறுபவர் :** அப். 27:13-30 ல் உள்ள கதையின் முதல் பகுதியை மனப்பாடமாகவோ அல்லது வாசிக்கவோ செய்யலாம். பின் “மாலுமிகள் சத்தமிடுவது என்ன என்று கேளுங்கள்.”

**மாலுமிகள் :** அலறுகின்றனர். “ஐயோ! இந்தப் புயலைக் கண்டு பயமாய் இருக்கிறது”, “நாம் செத்துப் போவோம்”

**கதை கூறுபவர் :** பவுல் சத்தமாகக் கூறுவதைக் கேளுங்கள்

**பவுல்** (சத்தமாக) “மாலுமிகளே! கப்பலை விட்டு விடாதீர்கள்! நாம் சாக மாட்டோம்! ஏனெனில் என்னுடைய தேவன் எனக்காக சில வேலைகளைத் தந்திருக்கிறார்.”

## நாடகம், 2வது பகுதி கப்பல் உடைகிறது (அப். 27:31-44)

**கதை கூறுபவர் :** அப், 27:31-44 லிருந்து கதையின் இரண்டாவது பகுதியைக் கூறி, பின் “கப்பல் தலைவன் சத்தமிட்டு கூறுவதைக் கேளுங்கள்.”

**கப்பல் தலைவன்:** சத்தமாக, “நாம் மூழ்கிப் போகிறோம். ஒரு கட்டையைப் பிடித்து நீந்தி கரைக்குப் போங்க!”

## 3வது பகுதி : பாம்பும் நெருப்பும் (அப். 28:1-6)

**கதை கூறுபவர் :** அப். 28:1-6 ல் உள்ள கதையின் மூன்றாவது பகுதியைக் கூறவும், பின் “மக்கள் அலறுவது என்ன என்று கேளுங்கள்.”

நெருப்பை சுற்றி இருந்த மக்கள் (அலறுகின்றனர்) “பாருங்க! அந்த விஷப் பாம்பு அவனைக் கடித்துவிட்டது.” அவன் அதை நெருப்புக்குள் உதறிப் போட்டான் “அவன் கை வீங்கவே இல்லை.”

**புபிலியு :** “அந்தப் பாம்பின் விஷம் உங்களை ஒன்றும் செய்யாதது எனக்கு ஆச்சரியமாக உள்ளது. உங்கள் தேவன் வல்லமையுள்ளவர். தயவுசெய்து என் வீட்டிற்கு வாருங்கள்.”

## 4வது பகுதி புபிலியுவின் தந்தை குணமாக்கப்பட்டார் (அப். 28:7-10)

**கதை கூறுபவர் :** அப். 28:7-10 ல் உள்ள நான்காவது கதைப்பகுதியைக் கூறி, பின், “மலித்தா தீவின் மக்கள் உரக்க கூறுவதைக் கேளுங்கள்.”

**மக்கள் :** சத்தமிட்டு, “நமது தலைவரின் அப்பாவை அவரது கடவுள் குணமாக்கி விட்டார்!” “தயவுசெய்து நோயாளியான என் அம்மாவுக்காக ஜெபியுங்கள்!” “என்னுடைய சகோதரனுக்காக வந்து ஜெபிங்க!”

**கதை கூறுபவர் :** நாடகம் முடிந்து விட்டதை அறிவிக்கவும். குழந்தைகளுக்கும், கேட்ட பெரியவர்களுக்கும் நன்றி கூறவும்.

**கேட்கவும் :** நம் வாழ்க்கையில் நேரும் துன்பமான நிகழ்ச்சிகளை நன்மையைக் கொண்டு வருவதற்காக தேவன் உபயோகிப்பதற்கு வேறு உதாரணங்கள் யாவை? (சிறுவர்களும் பெரியவர்களும் உதாரணம் கூறட்டும்)

ஆராதனையை நடத்தும் சபைத்தலைவருடன் பேசி பிள்ளைகள் -

- ஆராதனை வேளையின் போது இந்த நாடகத்தைப் பெரியவர்களுக்கு நடித்துக் காட்ட -
- இந்தப் பாடத்தின் ஆரம்பத்தில் பட்டியலிடப்பட்டுள்ள கேள்விகளைப் பெரியோர்களிடம் கேட்க -
- அவர்கள் ஆயத்தம் செய்த கவிதை போன்றவற்றை அரங்கேற்ற - ஏற்பாடு செய்யவும்

ரோமர் 8:28 ஐ மனனம் செய்க

**படம் :** நெருப்புக்குள் விழும் பாம்பின் படத்தை வரையவும். பெரிய பிள்ளைகள் சிறியவர்களுக்கு உதவட்டும். வரைந்த படத்தை வரும் ஆராதனை வேளையின் போது பெரியவர்களுக்குக் காட்டி இது தேவன் சாத்தானை முறியடிப்பதைக் காட்டுவதாக விளக்கவும்.



**கவிதை :** மூன்று சிறுவர்கள் சங் 69 ல் உள்ள இந்த மூன்று வசனங்களை ஒப்புவிக்கலாம்.

**தேவனே என்னை இரட்சியும். வெள்ளங்கள்**
**என் ஆத்துமா மட்டும் பெருகி வருகிறது.**
**ஆழமான உளையில் அமர்ந்திருக்கிறேன்.**
**நிற்க நிலையில்லை. நிலையாத ஜலத்தில்**
**ஆழ்ந்திருக்கிறேன். வெள்ளங்கள் என்மேல்**

**புரண்டு போகிறது. நான் கூப்பிடுகிறதினால்**
**இளைத்தேன். என் தொண்டை வறண்டு**
**போயிற்று. என் தேவனுக்கு நான்**
**காத்திருந்ததால் என் கண்கள் பூத்துப்**
**போயிற்று.**

**உம்முடைய வீட்டைக் குறித்து உண்டான**
**பக்தி வைராக்கியம் என்னைப் பட்சித்தது.**
**உம்மை நிந்திக்கிறவர்களுடைய**
**நிந்தனைகள் என் மேல் விழுந்தது.**
**என் ஆகாரத்தில் கசப்பு கலந்து**
**கொடுத்தார்கள். என் தாகத்துக்காக**
**காடியைக் குடிக்கக் கொடுத்தார்கள்.**

**உமது முகத்தை உமது அடியேனுக்கு**

**மறையாதேயும். நான் வியாகுலப்படுகிறேன்**

**எனக்குத் தீவிரமாய் செவிகொடுத்தருளும்.**

**தேவனே உம்முடைய இரட்சிப்பு**

**எனக்கு உயர்ந்த அடைக்கலமாவதாக!**

நமது மோசமான சூழ்நிலைகளில் இருந்து தேவன் எவ்வாறு நன்மையைக் கொண்டு வருகிறார் என்பதைக் காட்டும் முகமாக **பெரிய பிள்ளைகள்** கவிதை பாடல், சிறுகதை எழுதலாம். அல்லது அவர்கள் கண்டதை பற்றி சாட்சி கூறலாம்.

**ஜெபம் :** அன்பான தேவனே! எங்களுக்கும் மற்றவர்களுக்கும் நடந்த மோசமான நிகழ்ச்சிகளில் இருந்து நீர் நன்மையைக் கொண்டு வருகிறீர் என்பதை நாங்கள் நம்புகிறோம். நாங்கள் மோசமான நேரத்தை கடந்து கொண்டிருந்தாலும் உமக்கு சந்தோஷமாக சேவை செய்ய எங்களுக்கு உதவும்படி இயேசுவின் நாமத்தினாலே கேட்கிறோம்.

Copyright © 2003 by Paul-Timothy. May be freely copied.
Download from www.Paul-Timothy.net